062

உ

பாரதமாதாதுணை



No.
21 JUN 1922

வந்தேமாதரம்.

இந்து தேசாபிமானிகட்குரிய,

# சுதேசீய ரத்னாமிர்தம்.

முதற் பாகம்.

இஃது

சங்கரநயினார்கோவில் தாலுகா கஸ்பாவிலிருக்கும்
ஸ்ரீமான், முத்தையாத் தேவரவர்கள் குமாரர்
**மு. சுப்பையாத் தேவரால்**
இயற்றப்பட்டு

ஷை தாலூகா அடைக்கலாபுரம்,
ஸ்ரீமான், குருசாமித் தேவரவர்கள் குமாரர்
முத்தமிழ் க்ஷேத்ர வித்வரத்னம்,
**ஸ்ரீமான், K. சிதம்பரக் கவிராயரவர்களால்**
பரிசோதிக்கப்பட்டு

ஷை கஸ்பா கடலைக்கடை மகா-ள-ள-ஸ்ரீ
**தி. பழநியாண்டிப் பண்டாரம் அவர்களும்**
ஷை கஸ்பா எண்ணை வியாபாரம்,
**மு. சுப்பையா செட்டியார் அவர்களும்**
செய்த பொருளுதவியின் பேரில்
...னர்கோவில் "ஆனந்தா பிரஸில்"
...பதிப்பிக்கப்பெற்றது.

...ற் பதிப்பு காப்பி 1000.
...ஜிஸ்தர் செய்யப்பட்டது.
1922. [அணா 2.

BG.
N22
1491482

வந்தேமாதரம்.

# சுதேசிய ரத்னமிர்தம்.

2931

## விநாயகர் தோத்திரம்.

### அய்யா பழநிமலை வேலா என்ற மெட்டு.

சிராசையில் வளர்சி — மானே—உனைத்
தெரிசித்தேன் வல்லபைபூ — மானே
வேராசை யில்லாமல் — நானே—தினம்
வேண்டிக் கொண்டேன் பக — வானே (சிரா)

கந்தன் கடம்பற்கு மூத் — தோனே—எங்கள்
கர்மவினை நீக்கும் புண்ய — வானே
சிந்தா குலந்தவிர்க்குந் — தேனே—க்ருபைத்
தெய்வமே வைதீகப்பெரு — மானே (சிரா)

பாரா திருப்பதேது — சூது—சிறு
பாலகனென் பேரிலுண்டோ — வாது
கோரு திருப்ப வரிக் — கேது—அருள்
கொடுக்கும் வரமெனக்கு — ஓது (சிரா)

பாவி செய் பிழை பொறுப் — பாயே—பஞ்ச
பாதக மில்லாது தவிர்ப் — பாயே
கூவியே கும்பிட்டேன் குரு — நீயே—காமக்
கோட்டத்தின் மலை மகளி — சேயே (சிரா)

## பாரதமாதாதுதி.

### மாமயிலவனே யே வேலா என்ற மெட்டு

பல்லவி:

பாரத தேவி யென் தாயே — பாலனை யாள்வாயே நீயே

அனுபல்லவி.

ஆதார மில்லாதுன் — பாதபத்மத்தைத் தொழுதேன்
ஆதரித்திடுவாயே — யென்தாயே (பாரத)

கலியுகத்தி லுதித்த காரணி
சலியாமலே துதித்தேன் பூரணி
கதியுனை யன்றியிப் பதிதனில் வேறேது
மதிதனை பேதருவா — யென்தாயே (பாரத)

144432

## சுதேசியரத்னமிர்தம்.

அண்டமெல்லாம் புகழும் அம்மணி
கண்டா[illegible]திருங் கண்மணி
தொ[illegible] சுப்பையா யான்
கொண்டாட்ட முடனே
தண்டம் சமர்ப்பித்தே னென்தாயே (பாரத)

---

## மஹாத்மா காந்தியின்பேரில் பரமானந்தக்கும்மி.

கந்தனுக்கு மூத்த கணபதிதன்னையே
கைதொழுது நாமுஞ் சரணஞ்செய்து
சொந்தமுடனிதை சிந்தையில் நினைந்து
விந்தையுடன் கும்மி பாடிடுவோம்.

மாக்ஷிமை தங்கிய மஹாத்மா காந்தியும்
ஆக்ஷிய மாகத் தபசுசெய்து—அவர்
காக்ஷி விளங்கவே இந்நிலந் தன்னில் சுய
ராக்ஷியமென்றே தொகுத்து விட்டார்

பன்னிரண்டுதன் வருடமதாய்—அவர்
இந்நிலந் தன்னை நினையாமல்
கண்ணு ரெண்டுமூடிப் பின்னிடாமற் செய்த
கஷ்டமான தவம் என்னசொல்வேன்

புண்ணியர் செய்த தவத்தினாலே—இந்த
மண்ணினி லுள்ளோர்க்கு மருத்துவந்தான்
கண்ணியர் சொன்ன கட்டளைப்பிரகாரம்
எண்ணி மனதுடன் செய்திடுவோம்

கிஷ்ண அவதாரத்திற் பிறந்து—இங்கே
கஷ்டம் விளைவிக்கும் பாதகரை—அவர்
இஷ்டப் படிசெய்ய வொட்டாமல் நமக்
கிஷ்டம் வரும்படி செய்தனரே

வாத்துடன் வெகு திரத்துடன்—இரு
காத்துடன் மனஉறத்துடன்
துரைத்தன மென்ற வெள்ளைக்காரரிடம்
சுயராஜ்யமென்றே தொகுத்தனரே.

சூது வாது முள்ள துரை யென்ற வெள்ளையர்
ஓதுகின்றார் மஹான் முன்பதாக—நீங்கள்
ஏது வினைகள் தான் செய்தாலும் உமக்
கேது சுயராஜ்ய மென்றனரே.

அரசர் நமக்கே ராஜ்யம் தரவென்று
அவனுடன் அவர் இருக்கையிலே—அந்த
இரசக்குணமுள்ள கம்பேனி வியாபாரி
எண்ணத்துக்கென்றே தடுத்து விட்டார்.

சத்திடம் தவறாமல் பக்தியுள்ள மஹான்
யுக்தி செய்தார் அந்தநேரமதில்
நத்தியே யெல்லோரும் ஒத்துமையாய்க்கூடி.
விர்த்தி வரும்படி செய்தனரே.

சள்ளை விளைக்கும் வெள்ளைக்காரர்கள்
கள்ளைப்பற்றி வெகு கொள்ளை கொண்டார்
பள்ளருப்பறை பதினெட்டு ஜாதிகளும்
கள்ளுக்குடி கையைத் தள்ளிடுங்கள்.

மெயிலென்றும் மேலும் ஜெயிலென்றும்
வெள்ளைத்துயிலென்றும் அவருண்டுபண்ணி
மெய்யாகச்சொல்லியே கையிலிருக்கின்ற
காசு பணத்தைக் கவர்ந்து கொண்டார்.

ரோட்டு வரியென்றும் காட்டு வரியென்றும்
ரேட்டை உயர்த்தியே போட்டுக்கொண்டு—அவர்
கேட்ட படியே கொடுக்கா விட்டால் நம்மள்
வீட்டுக்கதவை பிடுங்குகின்றார்

கால் ரூபாய் என்றாலும் கவர்ன்மெண்டார் வேலையில்
கவலை இல்லை யென்றே சொல்வார்கள்
மேல் வரும் வினையை நினையாமல் இவர்
மேவித்திரிகின்றார் மானிடர்கள்.

கூடப்பட்ட வெள்ளைக்காரருக்கு நம்மள்
பாடுபட்டு மிகத் தந்ததிலும்
தேடும் திரவியமெல்லாம் கைக்கொண்டு
ஓடு எடுக்கவும் செய்திடுவார்.

தஞ்சமென்றவரை கெஞ்சி நாம் போனாலும்
பஞ்சமா பாதகற்கேற்றதொரு
வஞ்சகம் தன்னையே நெஞ்சில் நினைந்துமே
கொஞ்சமேனும் மனதன்பில்லையே.

காப்பித் தோட்டமென்றும் கோப்பித்தோட்டமென்றும்
கண்டபிடமெல்லாமுண்டு பண்ணி
வாய்ப்பிரியமாக வந்து ஜனங்களை
ருப்பிபிலேற்றியே கொண்டு போறார்.

கொண்டு போயங்கே நிண்டுமுண்டு செய்த
கொடுமைகளை யாலும் யென்ன சொல்வேன்
சண்டாளர் செய்கின்ற வஞ்சகம் தன்னையே
கண்டால் பரிதாபமாகுதையா.

இராட்டிலே பொரு பிரட்டுண்டுபண்ணி
இருட்டுத்தனங்கள் செய்தோரைப்போல்
உருட்டும் மிரட்டுஞ் செய்துகொண்டு—அங்கே
விரட்டுகின்றார் சகோதரரை

தேயிலை கவ்வாத்து செய்யவென்று இவர்
கையிலே கத்தியைத் தான் கொடுத்து
கவ்வாத்துச் செய்யப்பதைக்கின்ற பேர்களை
சப்பாத்தினாலே உதைக்கின்றார்

துரையென்கிறவர் விரைவினிற் சென்று
பறையென்கிற கங்காணியிடம்
நிரைபிடியாத பெண்டுகளை அங்கே
அரையும்படியே சொல்லுகின்றார்.

பிடித்தவர்க்குப்பெண்டாளவும் செய்கிறார்
அடித்தவர்க்கு அடிமையாக
கடித்தனமான சங்கதிகளையே
தன்மையில்லாமலே செய்து வாரார்

பாவிகள் செய்கின்ற பாதகந் தன்னையென்
னாவினாற் சொல்லவுங் கூசுதய்யா
தேவியென்ற பாரத மாதாவை யெல்லாம்
கூவியே நம்மவர் குறைகள் சொல்வோம்

அப்படிக் கொற்றதோர் அநியாயமானதை
எப்படி நாமள் விரும்பிடலாம்
இப்படிச் செய்திடும் வெள்ளையரை நீங்கள்
சொர்ப்பனத்திலும் நினைக்கவேண்டாம்

தோட்டங்களிலிவர் வாட்டத்துடனே தான்
வாடிக்கொண் டிருக்கின்றார் ஜனங்கள்—அதை
மீட்டும் பொருட்டுநாம் நாட்டினத்தைக் கொண்டால்
காட்டுகமாக வெளியாவார்

வியாபாரி என்ற வெள்ளைக் காரருள் தான்
வேகாரித் தனங்கள் செய்து விட்டார்
கால்வாரிப் போட்டாற்போல் செய்துவிட்டால் அவர்
எமாரியேதானும் நின்றிடுவார்

எதிர்கதுணியை யெரித்துவிட்டு—நம்மன்
கதர்த்துணியை யணிந்துகொண்டு
அதர்மமென்ற பிணிகளை நீக்கியே
விதர்ப்பமில்லா திருந்திடுவோம்.

தொல்லுலகில் சாந்தி சொல்லுகின்றமொழி
கல்லாகிலுமே கரைந்துவிடும்
மல்லுவேஷ்டி கட்டும் மாபாவியானோர்
மனதுகொஞ்சமுங் கரையலையே.

சுருட்டுப்பீடி லாகிரிவஸ்துக்களை
சுகித்திடுதென்னசுகமே—அதை
துரட்டித் தனமென் றுரையாமல்—நீங்கள்
துட்டுங் கொடுத்துப்பின் கெட்டுப்போவீர்.

கூட்டத்துடன் வெகு நாட்டத்துடன்—இனி
தேட்டத்துடனிதைக் கேட்டபோதே
நாட்டினத்தை மகான் கேட்டுக்கொண்டபடி
வீட்டுக்குகந்ததை வைத்திடுங்கள்.

இன்னிலந் தன்னிலே பின்னிடாமல்—நீங்கள்
அன்னியருடை யகற்றவென்று
உன்னித மாகவே சின்னவயதுள்ள
சுப்பையா யானுந் தொகுத்துவிட்டேன்.

## நொண்டிச் சிந்து.

இத்தேசத்துக்கிறைவருள—எம்மன்
சத்தியவான் புத்தி தன்னை நத்தியே கேளும்
ஒத்துழையாத் தருமமதை—இங்கே
உண்டு பண்ணினவர் தொண்டருக்காக
அண்டர்களும் கண்டேமதிய—அவனியில்
அவதரித்தார் வெகு கவலையுடன்
தவத்தில் பெரியோரைய்யா—அவரினுட
தேர்ந்த ரிஷி யாருமில்லை பாருலகினில்
உபத்திரவம தீர்த்தவரைய்யா—அவர்
உண்மையுள்ள நண்பர்கட்கு நன்மை கொண்டவர்
துவாரகா புரியாளும்—அங்கே
துஷ்டர்களை யடக்கும் கிருஷ்ணமூர்த்தி
அவரே இவராகும்—இதை
அம்புவியிலுள்ளோர் நம்பிடுவீர் அன்று

பஞ்சவரக கார்த்த திரக்—இன்று
நஞ்சமென்று வந்தபேரை அஞ்சவும் செய்பார்
நெஞ்சுருக்கக் காரரைய்யா—இங்கே
கொஞ்சமேனும் வஞ்சமில்லா பஞ்சைகள்க்கிட்ட
வஞ்சகத்தை இன்றேயொழித்தார்—அவரை
தஞ்சமென்று யெல்லோர்களும் சேர்ந்து வாழ்குவோம்
மஹாத்மா காந்தியினுட—மஹான்
மகுத்துவத்தை யானும் வகுத்துவிட்டேன்
இப்புவியோர் மகிழும்—சபையையா
செப்பிய தமிழதனை ஒப்பிடுவீரே
தப்பிதங்களாயினுமே—என்மேல்
தயவு செய்வீ ரபிரயமுடனே
பிரியமுடன் கேள்க்கும்—நம்மவர்
பெரியோர்கள்க் கெல்லாம்—வந்தனமே
வந்தனம் தந்தேனய்யா.

---

## அடங்காது அடங்காது என்ற மெட்டு.

ஆகாது ஆகாது அந்நியாய ரீதம் இது ஆகாது. (ஆகாது)

ஐரோப்பியாவில் யாவரையும் ஆதரித்த காந்தியை
வைராக்கியம் கொண்டு மவர் வைத்தனரே ஜெயிலுனுள்ளே
வம்பு செய்தாரே. இதை நம்பிடுவீரே. (இது ஆ)

இந்தியாவில் நம்மவர்க்கே இரக்கமுள்ள மஹானை
தந்திரமாய்க் கொண்டு சென்று கானடக்கி வைத்துக்கொண்டார்
தழும்பு இன்றதே உலகம் விழும்புகின்றதே. (இது ஆ)

பூமிபாரம் தீர்க்கவந்த புண்ணிய ரானவரை
சாமியென் றறியாமலே நேமித்தா ராரு வருடம்
சாதனை கொண்டார் யெவர் போதனைவிண்டார். (இது ஆ)

என்ன குற்றஞ் செய்தாரென்று மன்னர் மாதர் யாவரையும்
அன்னவிடத்தில் வந்து சின்னபின்னஞ் செய்துவிட்டார்
அடுக்குமோ கோபம் பின்னால் கெடுக்குமே பாவம் (இது ஆ)

தஞ்ச மென்றிருந்தபேரை தர்க்காற்றுப்படி சட்டம்
நெஞ்சினில் நகருப்படி நீருரைத்தீரே இட்டம்
சிந்தனை பாரீர் உங்கள் சிந்தனை கூரீர். (இது ஆ)

ராஜாங்கத்துக் குடமை ரக்ஷிப்பது கடமை
ர்சசரைச்செய் கொடுமை மோச ன்மஹே மடமை
நீதி யாதுமா யெங்கள் கீர்த்தி போகுமா. (இது ஆ)

## சுதேசிய ரத்னமிர்தம்.

**தென்பழநியில் வாழும் தேவாதி தேவா என்ற மெட்டு**

பக்தர் விவேகானந்தர் பரம சொந்தர்
உத்தமகரந்த ஸ்லோபத்யர் ப்ரபந்தர்
சத்யாக் கிரஹம் நாடி
ஒத்துழையாகக் கூடி
புத்தி தீக்ஷண்யத்தாலே புகழ்ந்து கொள்வோம். (பக்)

நாட்டுக்கு நல்ல கார்யத்தை நாட்டினரே
வாட்டங்க ளெல்லாந் தீர்த்தரு ளூட்டினரே
கோட்டு அடிமை மீட்டி
ராட்டினத்தைப் பாரூட்டி
தாட்டீகமாக நூற்றுத்தரிகள் செய்வோம். (பக்)

இந்து முசல் மஹான்கள்க்கிது நயமே
சிந்தா குலங்கள் தீர்க்கும் ஜெயம் ஜெயமே
மந்ர விநோத சுசர்
தந்ர ஞானப் பிரகாசர்
இந்திய சுதேசநேசர் சொல்க ணிங்கிடுவோம். (பக)

தேசவிசு வாசரைச் சிரமேற் கொண்டேன்
தாசன் சுப்பையா ஸேலைத் தமிழை விண்டேன்
ராஜரீகத்தின் சட்டம்
பேசுவதாலே கஷ்டம்
மோசமேன்றெண்ணிக் காந்தி முகூர்த்தங் கண்டேன். (பக்)

**பண்டாரத் தண்டாயுதா என்ற மெட்டு.**

காந்தி மகானைத் தேடுவோம் காங்கிரஸ் சபைகள் கூடுவோம் (கா)

பாந்தத் துடனே நாம் சேர்ந்தெல்லோருங் குண
சாந்தப் பிரஸ்தாபத் திருஷ்டாந்தத்தினால் நிதம் (காந்தி)

காந்த லேட்டினிஞெளி வேந்தர் காட்டினர் சுழி
தேர்ந்தவர் தந்தமொழி தேசத்துக் குகந்தவழி (காந்தி)

இத்தேசம் இடர் தீர்த்த துய்யா
ஒத்துழை புரிந்திட்ட மெய்யா
நத்தியே பாடினேன் சுப்பையா
நாரணனுக விளங்கும் காரணனுகத் துலங்கும். (காந்தி)

**மதுரை வளர்ச்சிந்து என்ற மெட்டு**

வந்தேமாதர மென்றதைக் கோட்பாகவே
வந்து விளங்குது நாட்டில் புண்ய
வகையறிவீரிங்கப் பாட்டில் சொன்னால்

# சுதேசிய ரத்னமிர்தம்.

சொர்க்கமாகக் காற்றும்
[illegible] ஜனிமே சேர்க்கும்
செந்தாமரை பூக்கும்
தந்திநிம் நல் வாக்கும்
தேசாபிமானிகளே நாமெல்லோருமே
சேர்ந்திருந்தோ மொரு கூட்டில்—இதைத்
தெரிவீரே யெங்கள் பெரியோரே. (வந்)

காந்தி மஹானைப்போல் காரண முள்ளவர்
இக்காலத்திலுமே தானேது அவர் வாக்யம்
கஷ்ட மென்றுமேலா ஒப்பாது—நல்ல
காங்கிரஸைச் சேர்த்து
தீங்கரஸ் தவிர்த்து
பாங்குடன் நூல் நூத்து
பாவுகளில் கோர்த்து
பாதாள லெங்கையில் ராவணன் யுத்தம்போல்
பாண்டி தேசமதில் சததம்—நன்றி
பாருங்கள் ஒன்று சேருங்கள். (வந்)

கலியுகத்திலக் காந்தி கண்கண்ட தெய்வமே
காவலரே நீரும் கண்டு மிக்க
ஆவலுடன் வார்த்தை விண்டு—நம்மள்
கஷ்டமதை நீங்கி
அதிஷ்டமதை வாங்கி
இஷ்டமதை ஓங்கி
இருந்திடவாம் தாங்கி
ஈசர்க்கடிமைசெய் தாசன் சுப்பையா
தமிழ் ரத்னமிர்தத்தைப் பாரும்—சேர்ந்து
மகிழ்வுட னெல்லோருங் கூறும்
இது மரியாதை நமக்கொருபாதை. (வந்)

## மங்கள தொண்டிச் சிந்து.

தேச தேசத் தரசர் புகழ்—நம்மள் வாசமுள்ள காந்திமஹான் மலரடிக்கும், மறைமகளி சவுக்கதலிக்கும்—நிதம் மங்களம் பொருந்துகின்ற சங்கரருக்கும், மங்கை நல்லாள் கோமதிக்கும்—திரமுடன் செங்கைவேலணிந்த செந்தூர் கந்தனுக்கும், இந்திரர் குலத்திலுதித்த—விசுவாசமுள்ள எந்தன் குரு பிதப்பர தாசருக்கும், இந்தியாவிலுள்ள பேர்க்கும்—இங்கே சிந்தையுடன் சுயராஜ்யம் கேட்பவருக்கும், இதைச் சொல்லி யன்போட படிப்பவர்க்கும்—நம்மவன் சுற்றத்தாருள்ளவர்கள் யாவருக்கும், மங்கள மங்களமே.

சுதேசிய ரத்னமிர்தம் முற்றிற்று.

உ

# விளம்பரம்.

## முக்கிய கவனிப்பு.

என் அன்பிற்குரிய நண்பர்காள்!

நாம் கவனிக்கக் கூடிய விஷயம் மஹாத்மா காந்திக்காக நாம் செய்ய வேண்டிய உபகாரம் என்ன? கள்ளுண்ணல் தீண்டாமை அன்னியராடை இவைகளை உபயோகிக்காமல் இந்தியாவில் செய்யக்கூடிய கதர் ஆடைகளை அணிவோமாகில் நமக்கு நன்மையோடு ஸ்வயராஜ்ஜியம் கிடைக்கும் இது உண்மை இவைகள் நன்கு விளங்கும்பொருட்டு இப்புத்தகம் புதிதாய் அச்சிடப்பட்டது வேண்டுவோர்கள் இதனடியில் கண்ட விலாசத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

கூடிய சீக்கிரம் இரண்டாம் பாகம் வெளிவரும்.

எனது விலாசம்,
மு. சுப்பையாத் தேவர்,
தெற்குத் தெரு
சங்கரநயினார்கோவில்.